DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.72/2024

PW - 8

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர்.ஆனந்த் (Lw - 8) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் 2, 4 மற்றும் 5 எதிரிகள் ஆஜர் இல்லை கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

முதல் விசாரணை **Date : 28.10.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் வெண்ணந்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்துவருகிறேன். நான் கடந்த 27.06.2021ம் தேதி மதியம் 02.20 மணிக்கு ராசிபுரம் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்தேன்.

அப்போது லட்சுமி என்பவரை அவரது சகோதரி விஜயா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். லட்சுமியை விசாரித்த போது அவரை 27.06.2021ம் தேதி காலை 10.30 மணிக்கு சிங்களாந்தபுரத்தில் தெரிந்த 5 நபர்கள் கத்தி மற்றும் கம்பியால் தாக்கியதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு வலது கண்ணத்தில் கீரல்காயம், 0.5x0.5cm அளவில் கீரல் காயம் இருந்தது. தனக்கு வலிப்புநோய் உள்ளது என்றும் தற்போது தலைசுற்றல் உள்ளது என்றும் கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமணைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

27.07.2021 தேதி லட்சுமி என்பவருக்கு சேலம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை குறித்த ஆவணங்களின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். ராசிபுரம் அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு அ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தி மற்றும் கம்பி ஆகியவற்றை காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி லட்சுமிக்கு வலது கண்ணத்தில் ஏற்பட்ட காயமானது நகக்கீரல்மூலம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் வாய்ப்பு உள்ளது. ஒரு நபர் தனக்கு தலைசுற்றல் மற்றும் உடல்வலி ஆகியவை உள்ளதாக பொய்யாக கூற வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**